www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**12 R**

Reg. No. 9

# முதல் திருப்புதல் தேர்வு - 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** **14 x 1 = 14**

1. குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா! எனப் பாடியவர்................
அ) பாரதியார் ஆ) சிற்பி பாலசுப்பிரமணியம் இ) சுரதா ஈ) அய்யப்பமாதவன்
2. கம்பர் தன் நூலுக்கு இட்ட பெயர்......அ) இராம கதை ஆ) இராம சரிதம் இ) இராமாவதாரம் ஈ) கம்பராமாயணம்
3. 'பொய்யா வானம்' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) வினைத் தொகை அ) உரிச்சொல் இ) தொழிற்பெயர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. 'வையகமும் வானகமும் ஆற்றலரிது' – எதற்கு? அ) செய்யாமல் செய்த உதவி ஆ) தினைத்துணை நன்றி இ) காலத்தினால் செய்த நன்றி ஈ) பயன்தூக்கார் செய்த உதவி
5. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்..........
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
6. 'விளியறி ஞமலி'' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
7. மகர யாழ் எத்தனை நரம்புகளைக் கொண்டது? அ) 16 ஆ) 21 இ) 7 ஈ) 17
8. வெண்பாவின் ஓசை ............... அ) துள்ளல் அ) அகவல் இ) தூங்கல் ஈ) செப்பல்
9. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்................
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்
10. ஆராய்ந்து சொல்கிறவர்...............அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்
11. 'தலைக்குளம்' சிறுகதை ஆசிரியர்..........
அ) உத்தம சோழன் ஆ) தோப்பில் முகமது மீரான் இ) பூமணி ஈ) சாந்தா தத்
12. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி.................
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
13. 'தமிழ்ப்பற்று முன்னோர்' வழியாக எனக்குக் கிடைத்த சீதனம் எனக் கூறியவர்..............
அ) பாரதியார் ஆ) சு.த. சற்குணர் இ) மயிலை சீனி. வேங்கடசாமி ஈ) ஐராவதம் மகாதேவன்
14. ARCHIVE – என்பதற்குரிய தமிழ்ச்சொல்லைத் தேர்க
அ) ஆவணம் ஆ) பிரதி இ) புனைவு ஈ) நூல்திரள்

SS PRITHVI

பகுதி – II

பிரிவு – I

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக** **3 x 2 = 6**

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' – யாருக்கு?
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** **2 x 2 = 4**

19. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு வரைக.
20. எழுத்தாணியின் வகைகள் யாவை?
21. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக** **7 x 2 = 14**

22. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் இருந்தன.
23. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க - புல் - புள்
24. இலக்கணக்குறிப்புத் தருக அ) ஆடலும் பாடலும் ஆ) செந்தமிழே
25. உறுப்பிலக்கணம் தருக ( ஒன்று மட்டும்) அ) செய்த ஆ) பேசுவார்
26. கலைச்சொல்லாக்கம் தருக அ) Internet Banking ஆ) Folder
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க அ) கோவில் ஆ) தலைமை
29. விடைக்கேற்ற வினா அமைக்க
1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
30. அசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை?



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

## பகுதி – III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக** **2 x 4 = 8**

31. வருபவர் எவராயினும் நன்றி செலுத்து
- இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
33. 'சூதும் கள்ளும் கேடு தரும்' – திருக்குறள் வழி விளக்குக.
34. ''யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே'' – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக** **2 x 4 = 8**

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
36. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்குக
37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக
38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடைதருக** **3 x 4 = 12**

39. அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக. **(அல்லது)**
ஆ) உடம்பாடு இல்லாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன் உறைந் தற்று
இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

40. அ) பாடாண்திணையைச் சான்றுடன் விளக்குக. **(அல்லது)**
ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
அ) கூடி வாழ்ந்தால் ,கோடி நன்மை **(அல்லது)**
ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

42. இலக்கியம் நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

• கவிமணி தேசிய விநாயகம்

43. **தமிழாக்கம் தருக.**

popular as the cultural capital of India. Tamil nadu is extremely well – known for its Marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well known and out standing Tanjore paintings that flourished at the time of chola dynasty in ancient Tanjavoor.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** **3 x 6 = 18**

44. அ) இராமனிடம் வெளிப்படும் உடன்பிறப்பியப் பண்பினைக் கம்பராமாயணம் வழிநின்று விளக்குக.
(அல்லது)
ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

45. அ) மயிலை சீனி வேங்கடசாமி ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் மெய்ப்பிக்க
(அல்லது)
ஆ) 'நெகிழியைத் தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' – என்ற தலைப்பில் உனது கருத்தினைக் கூறுக.

46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டுவன யாவை? (அல்லது)
ஆ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என்பதை நிறுவுக.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக** **4 + 2 = 6**

47. அ) ஒருமையுடன் .......... எனத் தொடங்கும் தெய்வமணிமாலைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'செயல்' என முடியும் குறளை அடிபிறழாமல் எடுதுக.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com